DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
CC No. 80 Of 2016
Prosecution witness : LW- 1/ PW- 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜமாலுதின் | Caste | : | |
| Father's Name | : | தாவுத்மரைக்காயன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | ஊத்துக்கோட்டை | Age | : | 43 |

(Accused Called Present)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.10.2024

முதல் விசாரணை நேரம் பகல் 12.25

1. நான் சிக்கன் கடை வைத்துள்ளேன்.
2. இவ்வழக்கில் விபத்தில் இறந்து போன ஐயூப்கானை எனக்கு தெரியும்.
3. 06.12.2015ம் தேதி மதியம் சுமார் 2.00 மணிக்கு தெம்பரம்பேட்டு பேருந்து நிலையம் அருகே நானும் பாஸ்கர் எனபவரும் ஊத்துக்கோட்டை இருந்து பாலவாக்கம் நோக்கி சென்றுக்கொண்டிருந்தோம். அப்போது ஐயூப்கான் என்பவர் பாலவாக்கம் நோக்கி இருசக்கரவாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது எதிரே வேகமாக வந்த வெள்ளை நிற TN-20-BC-2226 என்ற பதிவெண் கொண்ட என்று கூறிவிட்டு (தற்போது TN-33 என்று கூறினார்) போலோ வாகனம் ஐயூப்கான் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. நான் இறங்கி சென்று பார்த்தபோது ஐயூப்கானுக்கு கண்த்திலும் மார்பிலும் உயிர் விதையிலும் காயம் ஏற்ப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நடந்த சம்பவத்திற்கு நான் ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல் நிலையத்தில் அளித்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டியது என்றால் நான் சம்பவ இடம் சென்று பார்ப்பதற்குள் அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் இன்று முன்னிலையாகவில்லை என்பதால் அவரது தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் திரு. பாலசுப்பரமணியகுமார் மற்றும் எதிரி கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் மற்றும் சாட்சியும் அன்றைய தினம் வருவதாக

ஒப்புக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை 14.11.2024 ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியம் முடிவுற்ற நேரம் பகல் 12.40

DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
CC No. 80 Of 2016
Prosecution witness : LW- 8/ PW- 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கர் பிரேம் ஆனந்த் | Caste | : | |
| Father's Name | : | ஜோயல் மதன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | ஊத்துக்கோட்டை | Age | : | 45 |

(Accused Called Present)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.10.2024

முதல் விசாரணை நேரம் பகல் 12.40

1. நான் டிரைவராக உள்ளேன்.

2. இவ்வழக்கில் விபத்தில் இறந்து போன ஐயூப்கானை எனக்கு தெரியும். அசா1ஐ எனக்கு தெரியும்.

3. 06.12.2015ம் தேதி மதியம் சுமார் 2.00 மணிக்கு தெம்பரம்பேட்டு பேருந்து நிலையம் அருகே ஐயூப் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு நான் சம்பவயிடம் சென்றேன் அங்கு ஐயூப்கான் விபத்தில் காயம் ஏற்பட்டு இறந்து இருந்தார், விபத்து ஏற்படுத்திய 2226 பதிவு எண் கொண்ட வேல்ஸ் வேகன் போலோ சம்பவ இடத்தில் நின்றுக்கொண்டிருந்தது பின்பு இறந்து போன ஐயூப்கான் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்கான திருவள்ளுர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் அங்கு வந்த போலீசார் என்னிடம் விசாரித்து கையொப்பம் பெற்றார்கள்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் இன்று முன்னிலையாகவில்லை என்பதால் அவரது தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் திரு. பாலசுப்பரமணியகுமார் மற்றும் எதிரி கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் மற்றும் சாட்சியும் அன்றைய தினம் வருவதாக ஒப்புக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை 14.11.2024 ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியம் முடிவுற்ற நேரம் பகல் 12.50